








# காரைக்குடியில் கலைஞர் தமிழ்ச் சங்க 28வது ஆண்டு விழா!

## அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் தலைமை! மு.தென்னவன் ஏற்பாடு!

சிவகங்கை, அக். 29 -

சிவகங்கை மாவட்டம் காரைக்குடியில் முன்னாள் அமைச்சர் மூ.தென்னவன் நிறுவனராக கொண்ட கலைஞர் தமிழ்ச்சங்கம் செயல்பட்டு வருகிறது. கடந்த 28 ஆண்டுகளுக்கு முன்பாக கலைஞர் தமிழ் சங்கத்தை நவம்பர் மாதத்தில் தமிழக முதல்வர் கழக தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் துவக்கி வைத்தார். அன்று மூதல் கலைஞர் தமிழ் சங்கம் 28 ஆண்டுகளாக கலைஞரின் புகழ் பாடி வருகிறது .அதனை தொடர்ந்து வருகிற நவம்பர்1,ம் தேதி சனிக்கிழமை மாலை 5 மணி அளவில் காரைக்குடி கவியரசர் கண்ணதாசன் மணி மண்டபத்தில் கலைஞர் தமிழ் சங்கத்தின் 28வது ஆண்டு விழாவினை முன்னிட்டு மூத்த மிழறிஞர் கலைஞர் பிறந்த நாள் விழா கருத்தரங்கம் நடைபெற உள்ளது .

மாவட்ட கழக செயலாளர் கூட்டுறவுத்துறை அமைச்சர் கே ஆர். பெரிய கருப்பன் தலைமையில் தொழிலதிபர் பி.எல். படிக்காசு முன்னிலையில் கருத்தரங்கம் துவங்குகிறது. காரைக்குடி மாநகர மேயர் எஸ் .முத்துதுரை வரவேற்பு உரை ஆற்றுகிறார் .

கலைஞர் தமிழ்ச்சங்க நிறுவனர் மூன்னாள் அமைச்சர் மு.தென்னவன் விழா துவக்க உரை ஆற்றுகிறார். எம்.எல்.ஏக்கள் திருமதி தமிழரசி ரவிக்குமார் , எஸ்.மாங்குடி, முன்னாள் எம்.எல்.ஏ. சுப. துரைராசு, மாநகர துணை மேயர் மாநகர செயலாளர் நா.குணசேகரன் மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் நாகனி செந்தில்குமார் ஆகியோர் வாழ்த்துரை வழங்குகிறார்கள். தொடர்ந்து நடைபெறும் கருத்தரங்கம் நிகழ்ச்சியில் கழக கல்வியாளர் அணி தலைவர் புலவர் செந்தலை கௌதமன் தென்புலத்தில் பூத்த நெருப்பு, என்ற தலைப்பிலும், கழக செய்தி தொடர்பு இணைச் செயலாளர் சூர்யா கிருஷ்ணமூர்த்தி தெற்கில் உதித்த சூரியன், என்ற தலைப்பிலும், திராவிட கழக தலைமை சொற்பொழிவாளர் ஆரூர் நர்மதா ஆகியோர் கலைஞர் புகழ் பாடி சிறப்புரை ஆற்றுகிறார்கள்.

அதை தொடர்ந்து கழக கொள்கை பரப்பு செயலாளர் திண்டுக்கல் ஐ. லியோனி மறக்க முடியுமா என்ற தலைப்பில் கலைஞர் பற்றி சிறப்புரை ஆற்றுகிறார். கலைஞர் தமிழ்ச்சங்க பொருளாளர் பொறியாளர் தி.செந்தில் குமார் நன்றி கூறுகிறார். நிகழ்ச்சி ஏற்பாடுகளை கலைஞர் தமிழ் சங்க நிறுவனர் முன்னாள் அமைச்சர் மு.தென்னவன் தலைமையில் கலைஞர் தமிழ் சங்க நிர்வாகிகள் செய்து வருகிறார்கள்.

# கே.வி.குப்பம் பெ.முருகேசன் இல்ல மணவிழா!

## மாவட்டச் செயலாளர் ஏ.பி.நந்தகுமார் எம்.எல்.ஏ. வாழ்த்து!

வேலூர், அக். 29 -

வேலூர் மாவட்டம் கே.வி.குப்பம் மத்திய ஒன்றிய இலக்கிய அணி துணை அமைப்பாளர் பெ.முருகேசன்& விமலா இவர்களின் இல்ல திருமண விழாவில், வேலூர் மாவட்ட கழக செயலாளர் ஏ.பி.நந்தகுமார் எம்.எல்.ஏ கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்தினார்.

கழக புரவலர் துரை சிங்காரம், மேற்கு, மத்திய ஒன்றிய செயலாளர்கள் எல். இரவிச்சந்திரன், கே. சீதாராமன், மாநில கலை, இலக்கிய, பகுத்தறிவுப் பேரவை துணைச் செயலாளர் சி.கோபி. மாவட்ட கவுன்சிலர் எம். அசோக்குமார், சா. பரிமளம், கே.கே. சிட்டிபாபு, கே.குப்பன் ஆகியோரும் கலந்துகொண்டு வாழ்த்தினார்கள்.



வடகிழக்கு பருவமழை துவங்கியுள்ள நிலையில் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக தூத்துக்குடி மாவட்டம் விளாத்திகுளம் பொதுப்பணித் துறை கண்மாயின் மதகுகளை விளாத்திகுளம் சட்டமன்ற உறுப்பினர், ஜீ.வி.மார்க்கண்டேயன் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். உடன் விளாத்திகுளம் பேரூராட்சி செயல் அலுவலர் சுப்பிரமணியன், உதவி பொறியாளர் பிரகாஷ் விளாத்திகுளம் தெற்கு ஒன்றிய செயலாளர் இம்மானுவேல், விளாத்திகுளம் பேரூர் கழக செயலாளர் வேலுச்சாமி, உள்ளிட்டோர் உடன் இருந்தனர்.